நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**சி.சி.எண்.150/2019**

2022ம்ஆண்டு மார்ச் திங்கள் 24ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.7 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | **: பழனி** | **வயது** | **:** | **40** |
| **த/பெ.** | **: முனுசாமி** | **தொழில்** | **:** | **உணவு வியாபாரம்** |
| **ஊர்** | **: தாமலேரிமுத்தூர்** | **சமயம்** | **:** | |
| **வட்டம்** | **: திருப்பத்தூர்** | **சாதி** | **:** | |
| **மாவட்டம்** | **: திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் தாமலேரிமுத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் ஜோலார்பேட்டை ரயில் நிலைய உணவு வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 5,6 ஆண்டுகளுக்கு முன்பு, காலை 06.00 மணியளவில் நான் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தேன் போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். அங்கே ஒரு பெண்மணியை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். சுமார் 5,6 ஆண்டுகள் ஆகிவிட்டதால் தற்போது எனக்கு அவரை அடையாளம் காட்ட இயலாது. அந்த பெண்மணி போலீஸ் விசாரணையின் போது, நகை, பர்ஸ் ஆகியவற்றை எடுத்து உள்ளதாக சொன்னார். அதன் பிறகு போலீசார் ஜீப்பில் வேலூருக்கு அழைத்துச்சென்றார்கள். எங்களுடன் அந்த பெண்மணி, சாட்சி சந்தோஷ், போலீசார் வந்தார்கள்.அங்கே குடிசை வீடு ஒன்று இருந்தது. அந்த பெண்மணி குடிசையில் புதைத்து வைத்திருந்த தங்க கட்டிகளை எடுத்து ஆஜர் செய்தார். போலீசார் அதற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ. 3 ஆக ஏற்கெனவே குறியீடு செய்யப்பட்டள்ளது. கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான்.கைப்பற்றுதல் மகஜர் ஏற்கெனவே அ.த.சா.ஆ.4 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எதிரிகள் ஆஜர். சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.7 ன் சாட்சியம் நிறைவு செய்யப்படுகிறது.